# 2020ஆம் ஆண்டு மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 25/2020)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Madras School of Economics Act, 2020

## (Tamil Nadu Act No. 25 of 2020)

(as on 31st October, 2023)

**தமிழாக்கம் :**
**தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்**
**சென்னை**

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள்
அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2020ஆம் ஆண்டு மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம்
## (தமிழ்நாடு சட்ட எண் 25/2020)

பிரிவு பொருளடக்கம்


அத்தியாயம் – I
முன்னுரை

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள் .

அத்தியாயம் – II
நிறுவனம்

3. நிறுவனத்தை கூட்டிணைவு செய்தல்.
4. நிறுவனத்தின் நோக்கங்கள்.
5. நிறுவனத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.
6. மானியங்கள்.
7. சேர்க்கை மற்றும் தரநிலைகள்.
8. தேர்வுகளுக்கான சேர்க்கை.

அத்தியாயம் –III
நிறுவனத்தின் அலுவலர்கள்

9. நிறுவனத்தின் அலுவலர்கள்.
10. இயக்குநர்.
11. இயக்குநரின் பதவி காலியாக இருக்கும் நிலையில் பணி ஏற்பாடுகள்.
12. நிருவாக அலுவலர்.
13. தேர்வுக் கட்டுப்பாட்டாளர்.

14. நிதி அலுவலர்.

15. புலத் தலைவர்.

16. பிற அலுவலர்கள்.

## அத்தியாயம் IV

## நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்

17. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்.

18. ஆட்சி மன்றம்.

19. நிருவாக மன்றம்.

20. கல்வி மன்றம்.

21. நிதிக் குழு.

22. திட்டக் குழுமம்.

23. பிற குழுமங்கள், குழுக்கள் மற்றும் மன்றங்கள்.

## அத்தியாயம் V

## நிலைவிதிகள் மற்றும் அவசரவிதிகள்

24. நிலைவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

25. நிலைவிதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன.

26. அவசர விதிகள்.

## அத்தியாயம் –VI

## நிதி மற்றும் கணக்குகள்

27. ஆண்டறிக்கை.

28. ஆண்டுக் கணக்குகள்.

## அத்தியாயம் –VII

## பணியாளர்கள்

29. பணியாளர்களின் பணிநிபந்தனைகள்.

30. பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதியங்கள்.

**அத்தியாயம் –VIII**

**நிதிகள்**

31. நிரந்தர அறக்கட்டளை நிதி.

32. பொது நிதி.

33. மேம்பாட்டு நிதி.

34. நிதியைப் பராமரித்தல்.

**அத்தியாயம் –IX**

**நிறுவனத்தைக் கலைத்தல் அல்லது அங்கீகாரத்தை ரத்து செய்தல்**

35. நிறுவனத்தைக் கலைத்தல்.

36. கலைப்பின் போது நிறுவனத்தின் செலவினங்கள்.

37. நிறுவனத்தின் அங்கீகாரத்தை அரசு ரத்து செய்தல்.

38. கலைத்தல் அல்லது அங்கீகாரம் ரத்து செய்தலின் போது சொத்துகள், பொறுப்புக்களின் நிலை.

**அத்தியாயம் – X**

**பல்வகை மற்றும் இடைநிலை வகைமுறைகள்**

39. இடைநிலை வகைமுறைகள்.

40. ஈட்டுறுதி.

41. தகவல் மற்றும் பதிவுருக்களுக்காக அழைப்பாணை விடுக்கும் அரசின் அதிகாரம்.

42. கொள்கை விவரங்களில் பணிப்புரைகள் வழங்குவதற்கு அரசின் அதிகாரம்.

43. அதிகாரஅமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளை அமைத்துஉருவாக்குவதில் உள்ள பூசல்கள்.

44. குழுக்களை நிறுவி அமைத்தல்.

45. காலிப்பணியிடங்களை நிரப்புதல்.

46. அதிகார மற்றும் நிறுவன அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்களால் செல்லத்தகாதது ஆகாது.

47. நிறுவனத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல்.

48. நிறுவனத்தின் பதிவுருக்களை மெய்ப்பிக்கும் முறை.

49. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 2020ஆம் ஆண்டு மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம்

# தமிழ்நாடு சட்ட எண் 25/2020

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது 2020ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 9ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று அது பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

**தமிழ்நாடு மாநிலத்தில் பொருளியல், அதனைச் சார்ந்த பாடங்கள் மற்றும் மேலாண்மைத் துறைகளில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனத்தினை பதிவுசெய்வதற்காகவும் மற்றும் அதன் தொடர்பான அதனைச் சார்ந்த அல்லது பிற விவரங்களுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு :–

## அத்தியாயம்–I

## முன்னுரை

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**– (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கை வாயிலாக குறிப்பிடப்படும் நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**2. பொருள்வரையறைகள்.**– இச்சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "கல்வி மன்றம்" என்பது, பிரிவு 20இன் படி அமைக்கப்பட்ட கல்வி மன்றம் எனப் பொருள்படும்;

(b) "ஏஐசிடிஇ" என்பது, 1987ஆம் ஆண்டு அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தின் (மையச் சட்டம் 52/1987) பிரிவு 3இன்படி நிறுவப்பட்ட அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் எனப் பொருள்படும்;

(c) "குறிப்பிடப்பட்ட நாள்" என்பது, இச்சட்டத்தின் தொடக்கத்திற்காக குறிப்பிடப்பட்ட நாள் எனப் பொருள்படும்;

(d) "அதிகாரஅமைப்புகள்" என்பது, நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள் எனப் பொருள்படும்;

(e)"பொது நிதி மையம்" என்பது, பொது நிதி மற்றும் அதனோடு தொடர்புடைய பாடங்கள் கல்விசார் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நடைபெறும் நிறுவனத்தின் மையம் ஒன்று எனப் பொருள்படும்;

(f) "பல்கலைக்கழக கல்வித்துறை முதல்வர்" (Dean) என்பது, நிறுவனத்தின் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை முதல்வர் அல்லது அவர் இல்லாதிருந்தால் அவ்வாறு செயல்படும் நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட நபர் எனப் பொருள்படும்;

(g) "துறை" என்பது, நிறுவனத்தின் ஆய்வுக்கான துறை ஒன்று எனப் பொருள்படும் மற்றும் ஆய்வுக்கான மற்றும் ஆராய்ச்சிக்கான மையத்தை உள்ளடக்கும்;

(h) "பணியாளர்" என்பது, நிறுவனத்தால் அமர்த்தப்பட்ட நபர் எவரும் எனப் பொருள்படும் மற்றும்

நிறுவனத்தின் ஆசிரியர், ஊழியர் அல்லது பிற உறுப்பினர் எவரையும் உள்ளடக்கும்;

(i) "நிருவாக மன்றம்" என்பது, பிரிவு 19இன்படி அமைக்கப்பட்ட நிருவாக மன்றம் எனப் பொருள்படும்;

(j) "புலப் பேராசிரியர்" என்பது, நிறுவனத்தின் புலப் பேராசிரியர் எனப் பொருள்படும்;

(k) "ஆட்சிக் மன்றம்" என்பது, பிரிவு 18இன்படி அமைக்கப்பட்ட ஆட்சிக் மன்றம் எனப் பொருள்படும்;

(l) "அரசு" என்பது, மாநில அரசு எனப் பொருள்படும்;

(m) "விடுதி" என்பது, நிறுவனத்தால் பேணப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மாணவர்களுக்கான குடியிருப்புப் பகுதி எனப் பொருள்படும்;

(n) "நிறுவனம்" என்பது, மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளி, சென்னை எனப் பொருள்படும்;

(o) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, நிலைவிதிகள் மற்றும் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(p) "தகுதித் தேர்வு" என்பது, நிறுவனத்தில் படிப்பு எதிலும் சேர்வதற்காக விண்ணப்பிக்க, கல்வி மன்றத்தால் நிபந்தனையாகக் குறிப்பிடப்படும் அத்தகைய மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற வேண்டிய சோதனை அல்லது தேர்வு எனப் பொருள்படும்;

(q) "ஒழுங்குமுறை அமைப்பு" என்பது, உயர்கல்வியின் தரத்தைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழு, அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் போன்ற அத்தகைய அமைப்பை உள்ளடக்கிப் பொருள்படும்;

(r) "சங்கம்" என்பது, 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/1975) பதிவு செய்யப்பட்ட மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளி எனப் பொருள்படும்;

(s) "நிலைவிதிகள்" மற்றும் "அவசரவிதிகள்" என்பது, இச்சட்டத்தின்படி செய்யப்பட்ட முறையே நிலைவிதிகள் மற்றும் அவசரவிதிகள் எனப் பொருள்படும்;

(t) "மாணவன்" என்பது, நிறுவனத்தின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு மாணவன் எனப் பொருள்படும்;

(u) "ஆசிரியர்கள்" என்பது, கௌரவ பேராசிரியர்கள், பணி விடுவிக்கப்பட்ட பேராசிரியர்கள், சேர்க்கப்பட்ட பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் உதவிப் பேராசிரியர்கள் உள்ளிட்ட பேராசிரியர்கள் அல்லது விரிவுரை செய்யும் பொருட்டு நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட நபர் எவரும் என்று பொருள்படும்.;

(v) "யுஜிசி" என்பது, 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு சட்டத்தின் (மையச் சட்டம் 3/1956) பிரிவு 4இன்படி நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானியக் குழு எனப் பொருள்படும்;

## அத்தியாயம்–II
## நிறுவனம்

3. **நிறுவனத்தைக் கூட்டிணைவு செய்தல்.** (1) குறிப்பிடப்பட்ட நாளில் மற்றும் அதிலிருந்து, மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளியானது அதே பெயரைக் கொண்ட கூட்டாண்மை அமைப்பாக இருத்தல் வேண்டும்.

(2) நிறுவனமானது, இச்சட்டத்தின் வழி வகைகளுக்குட்பட்டு சொத்தினை அடைவதற்கும் வைத்துக்கொள்வதற்கும், ஒப்பந்தம் செய்துகொள்வதற்கும் மற்றும் இச்சட்டத்தின் நோக்கத்திற்குத் தேவையான பிறவற்றை செய்வதற்குமான அதிகாரங்களுடன் கூடிய தொடர்ந்த நிலைப்பாடு மற்றும் குறிப்பிட்ட இலச்சினையைக் கொண்டிருக்கும் மற்றும் அதன் பெயரால் வழக்கிடுதலும் மற்றும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) நிறுவனமானது, வட்டார மையங்கள், கூடுதல் வளாகங்கள் மற்றும் கல்வி மையங்களை பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் பிற முறைப்படுத்தும் அமைப்புகளின் விதிகளுக்குட்பட்டு, இம்மாநில அரசானது பொருத்தம் எனக் கருதும் அத்தகைய இடங்களில் நிறுவலாம்.

(4) நிறுவனத்தின் தலைமையகம் தமிழ்நாட்டில், சென்னையில் இருத்தல் வேண்டும்.

4. **நிறுவனத்தின் நோக்கங்கள்.–** (1) நிறுவனத்தின் நோக்கங்கள்,–

(a) தேசிய வளர்ச்சியில் ஒரு பங்கு வகிப்பதற்காக பொருளியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் மற்றும் மேலாண்மை பாடத்தில் கல்வி மற்றும் அறிவினை மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல்;

(b) பொருளியல், அதன் தொடர்பான பாடங்கள் மற்றும் மேலாண்மை பாடங்களை முன்னிறுத்தி உயர்கல்வி துறையில் உலகளாவிய புகழ்பெற்ற சிறப்பு மிக்க நிறுவனமாக்குதல்;

(c) கற்பித்தல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கொள்கைப் பரப்புதலுக்கான மேம்பட்ட மையமாக நிறுவனத்தை வளரச் செய்தல்;

(d) பொது மற்றும் தனியார் துறைகளில் இருந்து கொள்கை உருவாக்குபவர்களுக்காகவும் பிறருக்காகவும் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்;

(e) பொருளியல், அதனுடன் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மை துறைகளில் ஆலோசனை வழங்குதல் மற்றும் நிதியுதவி பெற்ற திட்டங்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(f) மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி வல்லுநர்களுக்கு இடையே உயர்கல்வித் துறையில் சமுதாயத்தில் பெரிய அளவில் சேவை செய்யும் பொறுப்புணர்வை வளர்த்தல் மற்றும் அறிவை மேம்படுத்த சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலந்தாய்வுகள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான திறமை வாய்ந்த கருவிகளாக பொருளாதார உத்திகளை அமைத்தல்;

(g) தேர்வுகளை நடத்துதல் மற்றும் பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை வழங்குதல்;

(h) சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி குறித்த ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் மற்றும் தேவை எனக்

கருதும் கல்வி நடவடிக்கைகளையும் பிற கல்வி சார் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்; மற்றும்

(i) பொருளாதாரம், மேலாண்மை, கல்வி மற்றும் தொடர்புடைய துறைகளில் அவ்வப்போது மாநில அரசு அல்லது மைய அரசு அல்லது பிற அரசு முகமைகள் பொது அல்லது தனியார் கூட்டாண்மை அமைப்புகளால் ஒப்படைக்கப்படும் பணிகளைச் செய்தல்.

5. **நிறுவனத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்**.– நிறுவனம் பின்வரும் அதிகாரங்களைச் செலுத்தலாம் மற்றும் பின்வரும் செயற்பணிகளைப் புரியலாம், அதாவது:–

(a) நிறுவனத்தின் நோக்கங்களை மேற்கொள்ள தேவைப்படும் ஆராய்ச்சி, கல்வி மற்றும் நெறிமுறைகளுக்கான மையங்களை நிர்வகித்தல் மற்றும் மேலாண்மை செய்தல்;

(b) நிறுவனமானது அவ்வப்போது தீர்மானிக்கும் கல்வி பிரிவுகளுக்கான நெறிமுறைகளை வழங்குதல் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்துதல் மற்றும் அறிவு மற்றும் திறமைகளை செயற்படுத்துதல்;

(c) பொருளியல் கல்வி மற்றும் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மை படிப்புகளை, வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயுமான துணை மையங்கள் அல்லது தொலைதூர கல்வித் திட்டங்கள் மூலம் பயிற்றுவித்தல் மற்றும் வளரச் செய்தல்;

(d) கல்வி வல்லுநர்கள் மற்றும் கல்வியில் மேன்மையுடையவர்களை, ஓய்வுபெற்ற சீர்மிகு பேராசிரியராக சிறப்பித்து நன்மதிப்பளித்தல்;

(e) நிறுவனம் தீர்மானிக்கும் மற்றும் அளிக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பட்டயங்கள், சான்றிதழ்கள், பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை ஏதேனும் தேர்வுகள், மதிப்பாய்வு அல்லது பிற சோதனை முறைகள் அடிப்படையில் வழங்குதல் மற்றும் நல்ல மற்றும் போதுமான காரணங்களுக்காக அத்தகைய பட்டயங்கள், சான்றிதழ்கள், பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை திரும்பப் பெறுதல்;

(f) அவசரவிதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறையில் கௌரவ பட்டங்கள் அல்லது சிறப்புத் தகுதிகளை நபர்களுக்கு அளித்தல்;

(g) நிறுவனத்தின் உறுப்பினர்கள் அல்லாத நபர்களாக தீர்மானிக்கப்படும் நபர்களுக்கு அஞ்சல்வழி மற்றும் அத்தகைய பிற படிப்புகள் உட்பட கல்வி மற்றும் பயிற்சி அளித்தல்;

(h) நிருவாக அமைச்சுப்பணி மற்றும் பிற பணியிடங்களை உருவாக்குதல் மற்றும் அதற்கு பணியமர்த்தம் செய்தல்;

(i) அவ்வப்போது வருகை தரும் பேராசிரியர்கள், ஓய்வு பெற்ற மாண்பமை பேராசிரியர்கள், ஆலோசகர்கள், தோழமை பேராசிரியர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், சிறப்பு கல்வியாளர்கள் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்களின் மேம்பாட்டிற்கு பங்களிக்கும் பிற நபர்களை ஒப்பந்த அடிப்படையில் அல்லது பிற வகையில் பணி அமர்த்தம் செய்தல்;

(j) பிற பல்கலைக்கழகங்கள் அல்லது அமைப்புகள் எதிலும் பணிபுரியும் சிறப்புடைய நபர்களை நிரந்தரமாக அல்லது குறிப்பிட்ட காலஅளவிற்கு பணி அமர்த்துதல் அல்லது பணியில் ஈடுபடுத்துதல்;

(k) இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகம் அல்லது அதிகாரஅமைப்பு அல்லது நிறுவனம் எவற்றுடனும் நிலை விதிகள் அமைக்கப்பட்டுள்ள முறை மற்றும் நோக்கங்களுக்காக கூட்டமைத்தல், ஒத்துழைத்தல் மற்றும் சேர்தல்;

(l) நிறுவனத்தின் கருத்துப்படி அதன்நோக்கங்களை மேற்கொள்ள தேவையான ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைகளுக்கான பள்ளிகள், மையங்கள், சிறப்பு ஆய்வகங்கள் அல்லது பிற அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பேணுதல்;

(m) தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு உதவிகள், படிப்பு உதவித்தொகை, மாணவர் உதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை நிறுவுதல் மற்றும் வழங்குதல்;

(n) மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் வசிப்பிடங்கள், விடுதிகளை நிறுவுதல், பேணுதல், கண்காணித்தல் மற்றும் உடல்நல மற்றும் பொதுநல நடவடிக்கைகளை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்களுக்கான வசிப்பிடங்களை அங்கீகரித்தல்;

(o) ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுக்கு வழிவகைகள் செய்தல் மற்றும் அந்த நோக்கத்திற்காக பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் நிறுவனம் தேவை எனக் கருதும் ஏற்பாடுகளைப் பதிவு செய்தல்;

(p) நிலை விதிகளுக்கு உட்பட்டு ஒரு மையத்தை, நிகழ்விற்கேற்ப நிறுவனம், துறை அல்லது பள்ளி என விளம்புகை செய்தல்;

(q) தேர்வு மதிப்பீடு அல்லது பிறவகை சோதனை எதையும் உள்ளடக்கி நிறுவனத்திற்குள் சேர்க்கைக்கான தரங்களைத் தீர்மானித்தல்;

(r) கட்டணங்கள் மற்றும் பிற செலவு தொகைகளை வகுத்துரைத்தல், கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்;

(s) பெண்கள் மற்றும் குறைபாடுள்ள மாணவர்களின் வசிப்பிடம், ஒழுக்கம் மற்றும் கற்பித்தல் தொடர்பாக நிருவாகம் பொருத்தம் எனக் கருதும் ஏற்பாடுகளைச் செய்தல்;

(t) பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையே ஒழுக்க நெறிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறுவனம் அவசியம் எனக் கருதும் ஒழுங்கு நடவடிக்கையை எடுத்தல்;

(u) முறைசாரா கல்வி மற்றும் விரிவாக்க சேவைகளை அமைத்தல் மற்றும் மேற்கொள்ளுதல்;

(v) நிறுவனம் அதன் நோக்கங்களை மேற்கொள்ள தேவை எனக் கருதுகிற சிறப்பு மையங்கள், தனித்தன்மை வாய்ந்த ஆய்வு மையங்கள் அல்லது ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைகளுக்கான பிற பகுதிகளை நிறுவுதல்;

(w) பேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள், உதவிப் பேராசிரியர் பதவிகள் மற்றும் நிறுவனத்திற்குத் தேவையான பிற கற்பித்தல், கல்வி அல்லது ஆராய்ச்சிப் பணியிடங்களை நிறுவுதல்;

(x) நிறுவனத்தின் நோக்கங்களுடன் இணைந்த பொருட்களுக்கு உறுதுணையாகும்

மானியங்கள், அறக்கட்டளை நிதிகள், பங்குத் தொகைகள், அன்பளிப்புகள் மற்றும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுதல்;

(y) ஆட்சிக்குழுவின் முன் அனுமதியுடன், நிறுவனத்தின் நலத்திற்காக அசையும் அல்லது அசையாச் சொத்து எதையும் அடைதல், வைத்துக்கொள்ளுதல், மேலாண்மை செய்தல் மற்றும் விற்பனை செய்தல்:

**வரம்புரை:** அரசு வழங்கிய எந்த நிலத்தையும் அரசின் முன்அனுமதியின்றி விற்பனை செய்தல் கூடாது;

(z) ஆட்சிக்குழுவின் அனுமதியுடன், பிணையமின்றி அல்லது நிறுவனத்தின் சொத்துக்கு எதிராக பிணையம் அல்லது அடைமானம் முறையில் பணக் கடன் வாங்குதல்;

(aa) நிறுவனத்தின் நோக்கங்கள் அனைத்திற்கும் அல்லது எதனையும் நிறைவேற்ற தேவையான, இடை நிகழ்வான அல்லது உகந்த அனைத்து பிற செயல்களையும் பொருட்களையும் செய்தல்;

6. **மானியங்கள்**.– நிறுவனம் சுயநிதி நிறுவனமாக இருக்கும்:

**வரம்புரை:** அரசு தேவை எனக் கருதும் குறிப்பிட்ட நோக்கம் எதற்காகவும் மானிய உதவி அல்லது பிற நிதியுதவிக்கு ஒப்புதல் அளிக்கலாம்.

**7.சேர்க்கை மற்றும் தரநிலைகள்**.– (1) நிறுவனமானது, இச்சட்டத்திற்கு மற்றும் பல்கலைக்கழக மானியக்குழுவின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நெறிகளுக்குட்பட்டு நிகழ்வுக்கேற்ப இனம், சமயக்கோட்பாடு, சாதி அல்லது வகுப்பு அல்லது சமயத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து நபர்களுக்கும் பொதுவாக்குதல் வேண்டும்.

(2) நிறுவனத்தின் பட்டங்கள் அல்லது சிறப்புப் பட்டங்கள் அல்லது பட்டயங்களுக்கான தேர்வுகளின் சேர்க்கைக்காக நிறுவனத்தின் படிப்புக்கு பின்வரும் நபர் எவரும்,–

(i) அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தேர்வில் அவர் தேர்ச்சியடைந்தாலன்றி; மற்றும்

(ii) வகுத்துரைக்கப்படும் பிற கல்வி நிபந்தனைகளை நிறைவேற்றினாலன்றி,

அனுமதிக்கப்படமாட்டார்.

(3) உட்பிரிவுகள் (1) மற்றும் (2)இல் அடங்கிய எதுவும்,–

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி அல்லது தரத்தை பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்புப் பிரிவில் அனுமதித்தல்;

(b) ஒரு பட்டம் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை வழங்குவதற்குத் தேவையான குறைந்தபட்ச தரத்திற்கும் குறைவான கல்வித்தரம் கொண்ட மாணவர் எவரையும் நிருவாகத்தின் பட்டியலில் வைத்திருத்தல்;

(c) நிருவாகத்தின் நலன் அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு முரணான நடத்தை கொண்டிருக்கும் நபர் எவரையும் அனுமதித்தல் அல்லது மாணவர் எவரையும் வைத்திருத்தல்; மற்றும்

(d) படிப்பிற்கு வகுத்துரைக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்தத் தவறிய மாணவர் எவரையும் நிறுவனத்தின் பெயர்ப் பட்டியலில் வைத்திருத்தல்,

ஆகியவற்றை நிறுவனத்திடம் கோருதல் கூடாது.

(4) உட்பிரிவுகள் (1), (2) மற்றும் (3)இன் வழிவகைகளுக்கு மற்றும் வகுத்துரைக்கப்படும் நிறுவனத்தின் நிலையான சேர்க்கை நடைமுறைகளுக்கு உட்பட்டு, தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு படிப்புப் பிரிவிலும் முப்பத்தைந்து விழுக்காடு இடங்களை நிறுவனம் இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

(5) உட்பிரிவு (4)இன்படி தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர்களுக்காக, ஒதுக்கீடு செய்யப்பட்ட முப்பத்தைந்து விழுக்காடு இடங்களுக்கான மாணவர்களின் சேர்க்கையானது, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி பின்பற்றப்படுகிற இடஒதுக்கீட்டின்படி ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

**விளக்கம்**.– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, "தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர்கள்" என்பது,–

i. தகுதித் தேர்வுக்கு முன்னதாக, ஐந்தாண்டுகளுக்குக் குறையாத ஒரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் குடியிருந்து வருகிற ஒரு மாணவர் அல்லது அவரின் பெற்றோரில் ஒருவர்; அல்லது

ii. தகுதித் தேர்வுக்குச் செல்லும் ஐந்தாண்டுகளுக்கு குறையாத ஒரு கால அளவிற்கு, தமிழ்நாடு மாநிலத்தில் ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் படித்து வருகிற ஒரு மாணவர்.

(6). உட்பிரிவுகள் (4) மற்றும் (5)இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், சேர்க்கைக்காக, தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத போது, அத்தகைய மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், தகுதியின் பேரில் மீதமுள்ள மாணவர்களால் நிரப்பப்படும்.

**8. தேர்வுகளுக்கான சேர்க்கை.–** (1) நிறுவனத்தினால் நடத்தப்படும் தேர்வு ஒன்றிற்காக, ஒவ்வொரு தேர்வு எழுதுபவரும் கல்விக்குழுவின் பரிந்துரையின் பேரில் நிருவாக மன்றத்தினால் பிறப்பிக்கப்படும் ஒரு சிறப்பு ஆணையினால் இந்த உட்பிரிவின் வழிவகைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டாலன்றி, நிறுவனத்தின் உறுப்பினராக பெயர் பதிவு செய்தல் வேண்டும். நிருவாக மன்றம் பொருத்தம் எனக் கருதும் வரையறைகளுக்குட்பட்டு, ஏதேனும் விலக்களிப்பு ஏற்படுத்தப்படலாம்.

(2) கல்விக் குழுவின் பரிந்துரையின் பேரில், நிறைவேற்றப்பட்ட, நிருவாக மன்றத்தின் ஆணை ஒன்றினால், அவர் நிறுவனத்தின் உறுப்பினராக பெயர் பதிவு செய்தல், அதற்கான வருகைப் பதிவு போன்ற தேவைகளில் மனநிறைவு அடைந்தாலன்றி அல்லது அத்தகைய பெயர் பதிவு செய்தலுக்கான தேவைகள் அல்லது வருகை அல்லது இரண்டிலிருந்தும் அவர் விலக்களிக்கப்பட்டாலன்றி தேர்வு எழுதுபவர் நிறுவனத்தினால் நடத்தப்படும் எந்த ஒரு தேர்விற்கும் அனுமதிக்கப்படமாட்டார். இந்தப் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு எதுவும், நிருவாக மன்றம் பொருத்தம் எனக் கருதும் வரையறைகளுக்கு உட்பட்டதாகும்.

(3) தேர்வு ஒன்றிற்காக, தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் ஆணை ஒன்றினால் நிறுவனத்தின்

பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்ட அல்லது ஓராண்டுக்கும் மேலாக தேர்வு எழுதுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட மாணவர் அல்லது தேர்வு எழுதுபவர் எவரும் அத்தகைய ஆணையினைப் பெற்ற நாளிலிருந்து பத்து நாட்களுக்குள், இயக்குநரிடம் மேல்முறையீடு செய்யலாம்.

(4) இது தொடர்பாக, இயக்குநரால் எடுக்கப்படும் எந்த முடிவும் அறுதியானதாகும்.

## அத்தியாயம் – III
## நிறுவனத்தின் அலுவலர்கள்

**9. நிறுவனத்தின் அலுவலர்கள்**.– பின்வருபவர்கள், நிறுவனத்தின் அலுவலர்களாக இருப்பர், அதாவது:–

(a) இயக்குநர்;

(b) நிருவாக அலுவலர்;

(c) தேர்வுக் கட்டுப்பாட்டாளர்;

(d) நிதி அலுவலர்;

(e) புலத் தலைவர்கள் ; மற்றும்

(f) நிறுவனத்தின் அலுவலர்களாக நிலை விதிகளால் அறிவிக்கப்படும் நிறுவனத்தின் பிற அலுவலர்கள்.

**10. இயக்குநர்.–** (1) வகுத்துரைக்கப்படும் முறையில் ஆட்சிக் மன்றத்தினால் இயக்குநர் பணி அமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் மூன்றாண்டுகள் காலஅளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மேலும் மூன்றாண்டுகள் கால அளவிற்கு மறு பணி அமர்த்தத்திற்கு தகுதியுடையவராகுதல் வேண்டும்.

(2) இயக்குநர் பொருளியல், நிதி மேலாண்மை, சமூக அறிவியல், கணிதவியல், புள்ளியியல், வங்கியியல் அல்லது தொடர்புடைய ஏதேனும் பிற பாடங்களில் நிபுணத்துவம் உடைய சிறந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்.

(3) இயக்குநர், நிறுவனத்தின் முழுநேர அலுவலராகவும் கல்வித் தலைவராகவும் மற்றும் முதன்மைச் செயல் அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(4) இயக்குநர், வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், செயற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**11. இயக்குநரின் பதவி காலியாக இருக்கும் நிலையில் பணி ஏற்பாடுகள்.**— விடுப்பு, உடல்நலக் குறைவு அல்லது பிற காரணத்தினால் இயக்குநர் இல்லாதிருக்கும் போது, ஆட்சி மன்றமானது, நிறுவனத்தின் மூத்த பேராசிரியரை அல்லது இயக்குநராக நியமிக்கப்படத் தகுதியுடைய ஏதேனும் பிற நபரை இயக்குநரின் அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்காகவும், கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் தேவையான ஏற்பாடுகளை ஆட்சிமன்றமானது உருவாக்கும் வரையில், நிறுவனத்தின் பொறுப்பு வகிக்கக்கூடிய இயக்குநரைப் பணியிலமர்த்தலாம்.

**12. நிருவாக அலுவலர்.**— (1) நிருவாக அலுவலர், நிறுவனத்தின் முழுநேர சம்பளம் பெறுகிற அலுவலராக இருத்தல் வேண்டும். நிருவாக அலுவலரின் பணி அமர்த்தத்தின் நெறிமுறைகளும் பணியின் வரையறைகளும், வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) நிருவாக அலுவலர், நிறுவனத்தின் சார்பாக உடன்படிக்கைகளை ஏற்படுத்த, ஆவணங்களில் கையொப்பம் இட மற்றும் பதிவுருகளைச் சான்றுறுதி செய்ய அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) நிருவாக அலுவலர், நிருவாக மன்றம் மற்றும் கல்வி மன்றத்தின் பதவிவழி செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கு எதிரான அனைத்து வழக்கு மற்றும் பிற சட்ட நடவடிக்கைகளில் வாதுரைகள் நிருவாக அலுவலரால் கையொப்பமிடப்படுதலும் ஒப்பாய்வு செய்யப்படுதலும் வேண்டும் மற்றும் அத்தகைய வழக்குகள் மற்றும் நடவடிக்கைகளில் அனைத்து செயல்முறைக் கட்டளைகளும் நிருவாக அலுவலருக்கு வழங்கப்படுதலும் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) நிருவாக அலுவலர், வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், பணிகளை புரிதலும் வேண்டும்.

13. **தேர்வுக் கட்டுப்பாட்டாளர்.–** (1) தேர்வுக் கட்டுப்பாட்டாளர், நிறுவனத்தின் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும். வகுத்துரைக்கப்படும் முறையிலும்

நெறிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டும் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டாளர், வகுத்துரைக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துதலும், செயற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**14. நிதி அலுவலர்.–** (1) நிதி அலுவலர், வகுத்துரைக்கப்படும் முறையில் நியமனம் செய்யப்படுதலும், அதிகாரங்களைச் செயல்படுத்துதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

**15. புலத்தலைவர்.–** (1) நிறுவனத்தின் ஒவ்வொரு துறைக்காகவும், தொடர்புடைய துறையின் தலைமைக் கல்வி அலுவலராக இருக்கும் ஒரு புலத்தலைவர் இருத்தல் வேண்டும்.

(2) புலத்தலைவர், வகுத்துரைக்கப்படும் முறையில் நியமனம் செய்யப்படுதலும், அதிகாரங்களைச் செலுத்துதலும், செயற்பணிகளைப் புரிதலும் வேண்டும்.

**16. பிற அலுவலர்கள்:–** நிறுவனத்தின் பிற அலுவலர்களின் பணியமர்த்தம் மற்றும் பணிகள் மற்றும் கடமைகள் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் IV
## நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்

**17. நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகள்.–** பின்வருவன, நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளாக இருத்தல் வேண்டும்.–

(1) ஆட்சி மன்றம்;

(2) நிருவாக மன்றம்;

(3) கல்வி மன்றம்

(4) நிதிக் குழு;

(5) திட்டக் குழு ; மற்றும்

(6) நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளாக நிலை விதிகளால் அறிவிக்கப்படும் நிறுவனத்தின் பிற அதிகாரஅமைப்புகள்.

**18. ஆட்சி மன்றம்**.– (1) வகுத்துரைக்கப்படும் முறையில் சங்கத்தின் நிர்வாக மன்றத்தினால் ஆட்சி மன்றமானது அமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஆட்சிமன்றம் பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(a) நிறுவனத்தின் செயற்பாடுகளின்மீது அதன் நோக்கங்களுக்கு இசைவாக முழு கண்காணிப்பைச் செயல்படுத்துதல்;

(b) நிறுவனத்தின், பரந்த கொள்கை மற்றும் செயல்முறைத் திட்டங்களை, அவ்வப்போது மறுஆய்வு செய்தல், நிறுவனத்தின் வேலை, மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளை அறிவுறுத்துதல்;

(c) நிறுவனத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் மற்றும் அத்தகைய தணிக்கை அறிக்கையும் பரிசீலனை செய்து தீர்மானங்கள் நிறைவேற்றுதல்;

(d) அறிவுரைக்காக அதில் குறிப்பிடப்படும் ஏதேனும் பொருள் குறித்து இயக்குநரிடம் அறிவுறுத்தல்; மற்றும்

(e) வகுத்துரைக்கப்படும் பிற பணிகளை நிறைவேற்றுதல்.

**19. நிருவாக மன்றம்:–** (1) நிருவாக மன்றம், நிறுவனத்தின் முதன்மை நிருவாக அமைப்பாக இருத்தல் வேண்டும்.

(2) நிருவாக மன்றமானது, பத்து உறுப்பினர்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அதன் மூன்று உறுப்பினர்கள்: –

(a) நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி–வழி;

(b) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி–வழி; மற்றும்

(c) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி– வழி;

இருத்தல் வேண்டும்.

(3) நிருவாக மன்றத்தின் மீதமுள்ள ஏழு உறுப்பினர்கள், பொருளியல் மற்றும் தொடர்புடைய பாடத்துறையிலும், மேலாண்மையிலும் சிறந்தவர்களுக் கிடையேயும் நிறுவனத்தின் பேராசிரியர்களுக்கிடையேயும் இருந்து வகுத்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) உறுப்பினர்களின் பதவி காலமும் செயலாட்சி மன்றத்தின் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**20. கல்வி மன்றம்.–** (1) கல்விமன்றம், நிறுவனத்தின் முதன்மை கல்வி அமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் கல்விமன்றம் நிலைவிதிகள் மற்றும் அவசரவிதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிறுவனத்தின் கல்விக் கொள்கைகளின் மீதான பொதுக் கண்காணிப்பினை ஒருங்கிணைக்கவும், செயல்படுத்தவும் வேண்டும்.

(2) கல்வி மன்றத்தின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவி காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**21. நிதிக் குழு .–** (1) நிதிக்குழுமம், நிதி தொடர்புடையவற்றைக் கவனித்துக்கொள்ள, நிறுவனத்தின் முதன்மை நிதி அமைப்பாக இருத்தல் வேண்டும்.

(2) நிதிக் குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவிகாலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**22. திட்டக் குழு .–** (1) திட்டக்குழுமம், நிறுவனத்தின் முதன்மை திட்டமிடும் அமைப்பாக இருத்தல் வேண்டும். திட்டக் குழுமமானது, உள்கட்டமைப்பு மற்றும் கல்வி உதவி அமைப்பு, ஒழுங்குமுறை அமைப்புகளின் நெறிமுறைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

(2) திட்டக் குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

**23. பிற குழுமங்கள், குழுக்கள் மற்றும் மன்றங்கள்.–** நிறுவனத்தின் அதிகார அமைப்புகளாக, நிலைவிதிகளால் விளம்பப்படும் பிற குழுமங்கள், குழுக்கள் மற்றும் மன்றங்களின் அமைப்பு அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள், வகுத்துரைக்கப்படும் விதத்தில் இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் V
## நிலைவிதிகள் மற்றும் அவசரவிதிகள்

**24. நிலைவிதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.–** (1) நிருவாக மன்றம், ஆட்சி மன்றத்தின் ஒப்புதலுக்குட்பட்டு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நிலைவிதிகளைச் செய்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, நிலைவிதிகள், பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு தொடர்புடைய விவரங்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வழிவகை செய்யலாம், அதாவது:–

(a) நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு களுடைய அமைப்பு, அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் கடமைகள், அவ்வப்போது அறிவிக்கப்படும்;

(b) கூறப்பட்ட அதிகாரஅமைப்பின் உறுப்பினர்களின் பணி அமர்த்தம், பணியில் தொடர்தல், உறுப்பினர் விலகுதல் அல்லது நீக்குதல், உறுப்பினர்களின் காலியிடங்களை நிரப்புதல் மற்றும்

அதிகாரஅமைப்புகளுக்குத் தொடர்புடைய பிற விவரங்கள் அனைத்தும்;

(c) நிறுவனத்தின் அலுவலர்களுடைய பணியமர்த்தம் மற்றும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் அவர்களின் ஊதியங்கள்;

(d) பணியமர்த்தத்தின் முறை மற்றும் ஆசிரியர்கள், பிற கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர்களின் பணியமர்த்தம் மற்றும் அவர்களின் ஊதியங்கள்;

(e) பணியாளர்களின் பணி நிபந்தனையானது, பணியாளர்களின் மூப்பு, அவர்களின் ஊதியம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை போன்றவற்றை உள்ளடக்கியது;

(f) பணியாளர்களின் ஓய்வூதிய பலன்கள், காப்பீடுகள் மற்றும் வருங்கால வைப்பு நிதிகளுக்கான வழிவகைகள்;

(g) பணியாளர்களின் பணி மூப்பினை நிர்வகிக்கும் கொள்கைகள்;

(h) பணியாளர்கள் அல்லது மாணவர்கள் மற்றும் நிறுவனத்திற்கிடையேயான பூசல்களை தீர்ப்பதற்கான நடைமுறை;

(i) நிறுவனத்தின் எந்த ஒரு அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பின் நடவடிக்கைக்கும் எதிராக பணியாளர் அல்லது மாணவர் எவரும் நிருவாகக் குழுவுக்கு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

(j) கௌரவப் பட்டங்களை வழங்குதல்;

(k) பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்குவதற்கான பட்டமளிப்பு விழாவினை நடத்துதல் மற்றும் பட்டமளிப்பு விழாவிற்கு முன்னர் அவசரம் ஏற்பட்டால் பட்டப் படிப்பு சான்றிதழ்களை வழங்குதல்;

(l) பட்டம், பட்டயம், சான்றிதழ் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளைத் திரும்பப் பெறுதல்;

(m) துறைகள், மையங்கள் மற்றும் இதர நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் நீக்குதல்;

(n) ஆய்வு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, மாணவர் உதவித்தொகை, பொருட்காட்சிகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகள் போன்றவற்றை நிறுவுதல்;

(o) நிறுவனத்தில் சேர்க்கைகள், கட்டண முறைகள் மற்றும் நிறுவனத்தின் தேர்வுகள், பட்டங்கள், பட்டயங்கள் அனுமதிகளுக்கான ஒழுங்குமுறை;

(p) நிறுவனத்தின் சேவைகளுக்காக வழங்கப்படும் சேவைக் கட்டணத்தை வசூலித்தல்;

(q) நிறுவனத்தின் உதவி பெற்ற ஆராய்ச்சி, ஆலோசனை, காப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை, தொடர் கல்வி மற்றும் பிற விரிவாக்க சேவைகளை நிர்வகிக்கும் முறை;

(r) நிறுவனத்தின் அலுவலர்கள் அல்லது அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஒப்படைத்தல்;

(s) ஆய்வு மையங்கள், ஆய்வுக் குழுமம், பல துறைகளின் ஒருங்கிணைந்த கல்வி, சிறப்பு மையங்கள்,

தனித்திறனுள்ள ஆய்வகங்கள் மற்றும் பிற குழுக்களை நிறுவுதல்;

(t) கற்றறிந்த அமைப்பு அல்லது கழகம் உள்ளிட்ட பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து மற்றும் ஒத்துழைப்பு முறையில் செயல்படுதல்;

(u) நிறுவனத்தின் மாணவர்களின் குடியிருப்புக்கான வரையறை;

(v) நிறுவனத்தினால் பராமரிக்கப்படாத விடுதிகளின் அங்கீகாரத்திற்கான வரையறை;

(w) உடல் நலம் மற்றும் ஒழுக்கம் மற்றும் நிறுவனத்தின் மாணவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள்;

(x) மாணவிகளுக்கான வசிப்பிடம், ஒழுக்கம், கற்பித்தல் மற்றும் நிறுவனத்திற்குள் அவர்களுக்கான ஏதேனும் சிறப்புக்கல்விகள் இருந்தால் அதற்கானச் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தல்;

(y) இந்தச் சட்டத்தினால் வகுத்துரைக்கப்படக்கூடிய அல்லது வகுத்துரைக்கப்படும் அனைத்து பிற விவரங்கள்;

**25. நிலைவிதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன:–**

(1) நிருவாக மன்றம், அவ்வப்போது நிலைவிதிகளைச் செய்யலாம் மற்றும் இந்தப் பிரிவில் வகைசெய்யப்படும் முறையில் நிலைவிதிகளைத் திருத்தம் செய்யலாம் அல்லது நீக்கறவு செய்யலாம்:

(2) நிருவாக மன்றம் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்றை நீக்கறவு செய்வதற்கான அல்லது திருத்தம் செய்வதற்கான நிலைவிதி ஒன்று ஆட்சிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆட்சிமன்றம் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது அதன் ஒப்புதலை நிறுத்தி வைக்கலாம். நிருவாக மன்றத்தினால் செய்யப்பட்ட நிலைவிதி ஒன்றை நீக்கறவு செய்வதற்கான ஒரு நிலைவிதியோ அல்லது திருத்தமோ ஆட்சிமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்தால் தவிர செல்லுபடியாகாது. நிலைவிதிகளின் நகல் தகவலுக்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

26. **அவசரவிதிகள்.**– (1) இந்தச் சட்டத்தின் மற்றும் நிலைவிதிகளின் வகை முறைகளுக்குட்பட்டு, கல்விமன்றத்தின் பரிந்துரையின் பேரில் நிருவாகக் குழு அவசரவிதிகளைச் செய்ய வேண்டும், ஆட்சிமன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, பின்வரும் விவரங்கள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகைசெய்யலாம், அவையாவன:–

(a) நிறுவனத்தில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் அவர்களின் பெயரை பதிவு செய்தல் போன்றவை;

(b) நிறுவனத்தின் அனைத்து பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ் போன்றவைகளுக்கு அமைக்கப்படும் கல்விக்கான படிப்புகள்;

(c) பயிற்றுமொழி மற்றும் தேர்வு;

(d) காலமுறை திட்டம், நவீன தர நிர்ணய நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான பிற புதிய முறைகள்;

(e) வழங்கப்படக்கூடிய பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ் மற்றும் பிற கல்வி சிறப்பு தகுதிகள், அதற்கான தகுதிகள் மற்றும் அவை வழங்குவது மற்றும் வழங்கப்படுவது தொடர்பாக கவனிக்கப்பட வேண்டிய விவரங்கள்;

(f) நிறுவனத்தில் பயிலுவதற்கான படிப்புகள் மற்றும் நிறுவனத்தின் சான்றிதழ்கள், பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் தேர்வுகள் ஆகியவற்றிற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்;

(g) ஆய்வு உதவித்தொகைகள், கல்வி உதவித்தொகைகள், மாணவர் உதவித்தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை வழங்குவதற்கான வரையறைகள்;

(h) நிறுவனத்தின் கல்வி பயணத்தொலைவை மேம்படுத்துவதற்கு தேவையானதாகக் கருதப்படும் வேறு அமைப்பு, அதனின் உருவாக்கம், உட்கூறு மற்றும் செயல்பாடுகள்;

(i) பதவிகாலம், நியமனமுறை மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு, தேர்வாளர்கள் மற்றும் நடுவர் ஆகியோரின் கடமைகள் உள்ளிட்ட தேர்வு நடைமுறை;

(j) தேர்வாளர், நடுவர், மதிப்பீட்டாளர்கள் மற்றும் அட்டவணைப்படுத்துபவர் ஆகியோர்களுக்கு வழங்கப்பட வேண்டிய மதிப்பூதியம்;

(k) நிலைவிதிகளில் செய்யப்பட்டுள்ள வழிவகைகளைத் தவிர்த்து பிற நபர்களின் பணியமர்த்தம் மற்றும் ஊதியங்கள்;

(2) நிருவாக மன்றத்தால் இயற்றப்படும் அவசரவிதிகள் அனைத்தும் அது நிர்ணயிக்கும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

## அத்தியாயம்–Vi
## நிதி மற்றும் கணக்குகள்

27. **ஆண்டறிக்கை.–** இந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை நிருவாகக் குழுவின் வழகாட்டுதல்களின் படி தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் தேதியிலோ அல்லது அதற்கு முன்போ ஆட்சி மன்றத்திற்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் ஆட்சி மன்றத்தினால் அதன் ஆண்டுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

28. **ஆண்டுக் கணக்குகள்.–** (1) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியன நிருவாக மன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி தயாரிக்கப்பட வேண்டும், ஆட்சிமன்றத்தினால் ஒப்புதல் பெறப்பட வேண்டும் மற்றும் 1949ஆம் ஆண்டு பட்டயக் கணக்காளர் சட்டத்தின் (மையச் சட்டம் XXXVIII/1949) படி தணிக்கை செய்ய தகுதியான பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தால் குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை அல்லது பதினைந்து மாதங்களுக்கு மிகாத இடைவெளியில் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(2) ஆண்டுக் கணக்குகளின் நகல், அதன் தணிக்கை அறிக்கையுடன், ஆட்சிமன்றத்தின் ஒப்புதலுக்காக குழுவின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## அத்தியாயம்–VII
## பணியாளர்கள்

**29. பணியாளர்களின் பணிநிபந்தனைகள்.–** (1) நிறுவனத்தின் ஒவ்வொரு பணியாளரும் நிலைவிதிகளின் வழிவகைகளின்படி பணிஅமர்த்தம் அல்லது நியமனம் செய்யப்பட வேண்டும்.

(2) நிறுவனம் மற்றும் பொதுவாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் எவருக்கும் இடையே எழும் பூசல் எதுவும், தீர்வுக்காக இயக்குநருக்கு அனுப்பப்படும், அவர் பணியாளருக்கு வாய்ப்பு ஒன்றை வழங்கியப்பின் குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பூசலைத் தீர்வு செய்ய வேண்டும்.

(3) இயக்குநரின் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு ஒன்றை ஆட்சிமன்றத்திடம் தாக்கல் செய்யலாம். மேல்முறையீட்டின்மீது ஆட்சிமன்றத்தின் முடிவே அறுதியானதாகும்.

(4) தற்காலிக அல்லது இடைக்கால அல்லது பகுதிநேர அல்லது ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்கள் எவரையும் பொறுத்த வரையில், பூசல் எதுவும் எழுந்தால் தொடர்புடைய துறைத்தலைவரால் கேட்கப்படும் மற்றும் தீர்மானிக்கப்படும் முடிவே அறுதியானதாகும்.

**30. பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வுதியங்கள்**.– நிறுவனம் தனது பணியாளர்களின் நலனுக்காக நிருவாக மன்றத்தினால் முடிவு செய்யப்படும் வரையறைகளுக்கு உட்பட்டு அத்தகைய முறையில் பொருத்தம் எனக் கருதும், ஓய்வூதியம் அல்லது நலத்திட்டங்கள் அல்லது வருங்கால வைப்புநிதி அல்லது காப்பீட்டு திட்டங்கள் போன்றவற்றை உருவாக்கலாம்.

## அத்தியாயம்–VIII
## நிதிகள்

**31. நிரந்தர அறக்கட்டளை நிதி.–** (1) நிறுவனமானது குறைந்தபட்சம் இருபத்தைந்து கோடி ரூபாய்க்கு நிரந்தர அறக்கட்டளை நிதியை நிறுவ வேண்டும்.

(2) வகுத்துரைக்கப்படும் முறையில் நிரந்தர அறக்கட்டளை நிதியில் முதலீடு செய்ய நிறுவனத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(3) நிறுவனம் தொகை எதையும் பொது நிதி அல்லது வளர்ச்சி நிதியிலிருந்து நிரந்தர அறக்கட்டளை நிதிக்கு மாற்றம் செய்யலாம்.

(4) (1)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தொகையைவிட அதிகமான தொகை எதையும் நிறுவனத்தின் வளர்ச்சி நோக்கத்திற்காக நிரந்தர அறக்கட்டளையிலிருந்து நிறுவனம் திரும்பப் பெறலாம்.

**32. பொது நிதி.–** (1) நிறுவனம் ஒரு பொது நிதியை நிறுவி, அதற்கு பின்வரும் தொகையை வரவு வைத்தல் வேண்டும்,

(a) கட்டணங்களிலிருந்து நிறுவனத்தால் பெறப்பட்ட வருமானம்;

(b) தனிநபர்கள் அல்லது நிறுவனங்களால் வழங்கப்படும் விருப்பஆவண வழிக்கொடை, நன்கொடைகள், அறக்கட்டளை நிதி அல்லது பிற மானியங்கள் எதுவும்;

(c) தொழில் முனைவோர், வர்த்தகர்கள், தொழிலகங்களிலிருந்து பெறப்படும் விருப்ப ஆவண வழிக்கொடைகள் அல்லது பங்களிப்பு எதுவும்;

(d) பிற ஆதாரம் எதிலிருந்தும் பெறப்பட்ட அனைத்து தொகைகள்;

(e) சங்கத்தினால் அளிக்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்; மற்றும்

(f) நடைமுறையிலிருக்கும் சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு வழங்கப்படும் அனைத்து பங்களிப்புகள்;

(2) பொதுநிதியில் வரவு வைக்கப்பட்ட தொகைகளானது நிறுவனம் சந்திக்கும் அனைத்து தொடர் செலவினங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

**33. மேம்பாட்டு நிதி.**– (1) நிறுவனம் ஒரு மேம்பாட்டு நிதியை நிறுவி, அதற்கு பின்வரும் தொகைகளை வரவு வைக்க வேண்டும்:–

(a) மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் மேம்மாட்டுக் கட்டணங்கள்;

(b) நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக பிற மூலங்களிலிருந்து பெறப்படும் தொகைகள் அனைத்தும்;

(c) சங்கத்தினால் வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்;

(d) நடைமுறையிலிருக்கும் சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்; மற்றும்

(e) நிரந்தர அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் அனைத்து வருமானம்;

(2) அவ்வப்போது மேம்பாட்டு நிதிக்கு வரவு வைக்கப்படும் தொகைகள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

**34. நிதியைப் பராமரித்தல்.–** பிரிவுகள் 31, 32 மற்றும் 33இன்படி ஆட்சிமன்றத்தின் பொதுவான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, வகுத்துரைக்கப்படும் முறையில் நிறுவப்பட்ட முறைபடுத்துதலும் நிதிகள் முறைப்படுத்தப்படுதலும் பராமரிக்கப்படுதலும் வேண்டும்.

## அத்தியாயம்–IX
## நிறுவனத்தைக் கலைத்தல் அல்லது அங்கீகாரத்தை ரத்து செய்தல்

**35. நிறுவனத்தைக் கலைத்தல்.–** (1) நிறுவனமானது காரணம் எதற்காகவும், அதன் கலைப்பை முன்மொழிந்தால், அது அரசிற்கு குறைந்தது ஆறு மாதங்களுக்குள் எழுத்துப்பூர்வமான அறிவிப்பினை கொடுக்க வேண்டும்.

(2). உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கை கிடைக்கப்பெற்றதன் பேரில், வழக்கமான படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்கள் தங்கள் படிப்புகளை அல்லது ஆய்வுகளை நிறைவு செய்யும்வரை, நிறுவனத்தின் கலைப்புத் தேதியிலிருந்து நிர்வாகத்திற்கான ஏற்பாடுகளை வகுத்துரைக்கப்படும் முறையில் அரசானது செய்தல் வேண்டும்.

**36. கலைப்பின்போது நிறுவனத்தின் செலவினங்கள்.–** (1) பிரிவு 35இன்படி அதன் கலைப்பின் போது நிறுவனத்தின் நிருவாக கலைப்புச் செலவானது நிலையான அறக்கட்டளை நிதிகள், பொது நிதி மற்றும் மேம்பாட்டு நிதியிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன்படி குறிப்பிடப்பட்ட நிதிகள் நிறுவனத்தின் செலவினங்களை எதிர்கொள்ளப் போதுமானதாக இல்லையென்றால், நிறுவனத்தின் சொத்துகள் அல்லது உடைமைகளை அரசு விற்பனை செய்வதின் மூலம் அத்தகைய செலவினங்கள் எதிர்கொள்ளப்படலாம்.

37. **நிறுவனத்தின் அங்கீகாரத்தை அரசு ரத்து செய்தல்.–** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் நிறுவனம் செயல்படவில்லை என அடிப்படையான மற்றும் போதிய குற்றச்சாட்டை அரசு பெறுகிறபோது, நிறுவனத்தின் அங்கீகாரத்தை ஏன் ரத்து செய்யக் கூடாது என்று இரண்டு மாதங்களுக்கு மிகாத நேரத்திற்குள் அது நிறுவனத்திடம் காரணம் கோரும் குறிப்பாணை ஒன்றைப் புகார் நகலுடன் கொடுக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு நிறுவனத்தின் பதில் கிடைக்கப் பெற்றதும், நிறுவனத்தின் செயல்முறைகளில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் மீறுகை அல்லது தவறான மேலாண்மை உள்ளது என முதல் நோக்கில் அரசு மனநிறைவடைந்தால், அது தேவை எனக் கருதும் விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி ஒரு விசாரணையின் நோக்கத்திற்காக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை மீறிய குற்றத்தின் பேரிலான விசாரணைக்கு விசாரணை அதிகாரியாக அரசு அறிவிக்கையின் வாயிலாக ஓர் அலுவலர் அல்லது அதிகாரியை நியமித்தல் வேண்டும்.

(4) (3)ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஒரு விசாரணை அதிகாரி, இந்தச் சட்டத்தின்படி, அதன் செயல்முறைகளை நிகழ்த்தும் போதான வழக்கினை விசாரிப்பதற்கு மற்றும் குறிப்பாக பின்வரும் விவரங்களைப்

பொறுத்த வரையில், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருப்பார்,–

(a) சாட்சி எவருக்கும் அழைப்பாணை விடுத்து அவரின் வருகையைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் உறுதிமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

(b) ஆவணம் எதையும் வெளிக்கொணர்ந்து முன்னிலைப்படுத்துமாறு கோருதல்;

(c) அலுவலகம் எதிலுமிருந்து பொது பதிவுரு அல்லது அதன் நகலை கோருதல்;

(d) ஆணைமொழி ஆவணங்களின்மீது சான்று பெறுதல்;

(e) வகுத்துரைக்கப்பட்ட பிற விவரங்கள் எதுவும்;

(5) விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் நிறுவனம் மீறியதாக அரசானது மனநிறைவடைந்தால், தேவையான முன்னேற்றங்களை செய்யவும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை முறையாகச் செயற்படுத்த பரிந்துரைக்கவும், நிறுவனத்திற்கு கட்டளையிடுதல் வேண்டும்.

(6) நிறுவனத்தின் கல்வி தரத்தை அச்சுறுத்தும் வகையில் தவறான நிதி மேலாண்மை மற்றும் முறைகேட்டிற்கு வழிவகுக்கும் விதத்தில் நிறுவனம் சட்டத்தை தொடர்ச்சியாக மீறுவதாக அரசு கண்டறிந்தால் அது ஒரு நிருவாகியை நியமிக்கலாம்.

(7) உட்பிரிவு (6)இன்படி நியமிக்கப்பட்ட நிருவாகி இந்தச் சட்டத்தின்படி ஆட்சிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் செயல்படுத்தலாம் மற்றும் அனைத்து கடமைகளையும் நிறைவேற்றலாம் மற்றும் நேர்வழிப் படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்கள் அவர்களின் படிப்புகள் / பாடத்திட்டத்தினை நிறைவு செய்யும் வரை மற்றும் நிகழ்விற்கேற்ப அவர்களுக்குப் பட்டம், பட்டயம் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகள் வழங்கப்படும் வரையிலும் நிறுவனத்தின் விவகாரங்களை நிருவகிக்கலாம்.

(8) நேர்வழிப் படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்களுக்கு நிகழ்விற்கேற்ப பட்டங்கள், பட்டயங்கள் அல்லது கல்வி சிறப்பு தகுதிகள் வழங்கப்பட்ட பிறகு நிருவாகி அது குறித்து அரசிற்கு அறிக்கை ஒன்றை அளித்தல் வேண்டும்.

(9) உட்பிரிவு (8)இன்படி அறிவிக்கை கிடைக்கப்பெற்றதும், அரசு உரிய கவனத்திற்கு பிறகு, ஒத்த நோக்கங்களைக் கொண்ட சங்கம் அல்லது அறக்கட்டளை அல்லது பிற அமைப்பு எதற்கும் ஆட்சிமன்றத்தின் அதிகாரங்களை அளிப்பதன் மூலம் நிறுவனத்தின் செயல்பாடுகளைத் தொடரலாம் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு மற்றும் நிறுவனம் தொடர்பான பிற ஒழுங்குமுறை அமைப்புகளின் முன் ஒப்புதலுடன் அங்கீகாரத்தை ரத்து செய்யலாம்.

(10) உட்பிரிவு (9)இன்படி அங்கீகாரம் ரத்து செய்யும் செயல்முறையின் போது அரசானது, நிறுவனத்தின் விவகாரங்களின் மேலாண்மை செய்யும் நோக்கத்திற்காக நிரந்தர அறக்கட்டளை நிதி, பொது நிதி அல்லது மேம்பாட்டு நிதி ஆகியவற்றை பயன்படுத்திக் கொள்ளலாம். நிறுவனத்தின் தேவையான

செலவினங்களை சந்திக்க நிறுவனத்தின் நிதிகள் போதுமானதாக இல்லை என்றால் அரசு செலவினங்களை சந்திப்பதற்கு நிறுவனத்தின் சொத்துகள் அல்லது உடைமைகளை விற்பனை செய்யலாம்.

**38. கலைத்தல் அல்லது அங்கீகாரம் ரத்து செய்தலின் போது சொத்துகள், பொறுப்புகளின் நிலை.–** நிறுவனத்தின் கலைப்பு அல்லது அங்கீகார மறுத்தல் நிகழ்வில், அனைத்து சொத்துகள் மற்றும் நிரந்தர அறக்கட்டளை நிதி, பொது நிதி, மேம்பாட்டு நிதி அல்லது பிற நிதி எவற்றையும் உள்ளடக்கிய அனைத்து உடைமைகள் மற்றும் நிதியின் பொறுப்புகளும் சங்கத்திற்கு உரியதாக்குதல் வேண்டும்.

## அத்தியாயம்–X
## பல்வகை மற்றும் இடைநிலை வகைமுறைகள்

**39. இடைநிலை வகைமுறைகள்.–** இந்தச் சட்டத்தில் மற்றும் நிலைச்சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும்,–

i. குறிப்பிட்ட நாளில், சங்கத்தின் அனைத்து கற்பித்தல் செயல்பாடுகள், மனித வளங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் இந்தச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட நிறுவனத்திற்கு மாற்றியமைத்தல், மற்றும் ஒப்படைத்தல் வேண்டும், மற்றும்

ii. இயக்குநர், ஆட்சிக்குழுவின் முன் அனுமதியுடன் மற்றும் நிதியின் இருப்பிற்கு உட்பட்டு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக நிறுவனத்தின் செயல்பாடுகள் அனைத்தையும் அல்லது

எதனையும் விட்டுவிடாமல் செய்தல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டம், நிலைவிதிகள் மற்றும் அவசரவிதிகளினால் வகை செய்யப்பட்ட அத்தகைய அதிகாரஅமைப்பு நடைமுறைக்கு வரும்வரை இந்தச் சட்டத்தால், நிலைவிதிகளால் மற்றும் அவசரவிதிகளால் நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு எதனாலும் செயல்படுத்த அல்லது நிகழ்த்தப்பட வேண்டிய அதிகாரம் எதனையும் செயல்முறைப்படுத்தலாம் அல்லது அந்த நோக்கத்திற்காக ஆற்றப்பட வேண்டிய கடமைகள் எதையும் நிகழ்த்தலாம்; மற்றும்

iii. குறிப்பிட்ட நாளில், நிறுவனத்தில் இதுவரையில் பதிவுசெய்த மாணவர்கள், நிறுவனத்தின் மாணவர்களாகத் தொடருவர் மற்றும் கல்வி ஆண்டின் தொடர்ச்சியிலோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ அவர்களின் படிப்பை நிறைவு செய்தல் வேண்டும்.

**40. ஈட்டுறுதி.–** இந்தச் சட்டம் அல்லது நிலை விதிகள் அல்லது அவசரவிதிகளுக்கு இணங்கிய வகையில் நிறுவனம், நிறுவனத்தின் அதிகாரிகள், இயக்குநர் அல்லது பிற அலுவலர்கள் அல்லது பிற நபர் எவரும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதிய எதனையும் பொறுத்து அவர்களுக்கு எதிராக உரிமைவழக்கு அல்லது குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் தொடரப்படுதல் மற்றும் அவர்களிடமிருந்து இழப்பீடுகள் எதுவும் கோரப்படுதல் கூடாது.

**41. தகவல் மற்றும் பதிவுருக்களுக்காக அழைப்பாணை விடுக்கும் அரசின் அதிகாரம்.–** (1) நிறுவனத்தின் நிர்வாகம், நிதி அல்லது பிற விவகாரங்கள் தொடர்பான தகவல்கள் அல்லது பதிவுருக்களை அளிக்க, அரசானது அழைப்பு விடுக்கும்போது அவற்றை அளிப்பது நிறுவனத்தின் அலுவலர் அல்லது அதிகார அமைப்பு அல்லது நிறுவனத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் அல்லது நிலைவிதிகள் அல்லது அவசரவிதிகளின் விதிமுறைகளில் ஏதேனும் மீறப்படுவதாகக் கருதினால், பிரிவு 42இன்படி அரசு அது தேவை எனக் கருதும் பணிப்புரைகளை நிறுவனத்திற்கு வழங்கலாம்.

**42. கொள்கை விவரங்களில் பணிப்புரைகள் வழங்குவதற்கு அரசின் அதிகாரம்.–** அரசு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்படாத கொள்கை விவரங்கள் குறித்து அவ்வப்போது அது தேவை எனக் கருதும் பணிப்புரைகளை நிறுவனத்திற்கு வழங்கலாம். அத்தகைய பணிப்புரைகளுக்கு நிறுவனம் இணங்கி நடத்தல் வேண்டும்.

**43. அதிகாரஅமைப்புகள் மற்றும் பிற அமைப்புகளை அமைத்து உருவாக்குவதில் உள்ள பூசல்கள்.–** நிறுவனத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பிற்கு உரிய நபர் எவரும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டாரா அல்லது நியமிக்கப்பட்டாரா அல்லது அதிகாரமளிக்கப்பட்டாரா என வினா எழுந்தால் அந்த விவகாரங்கள் ஆட்சிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்படுதலும், அதன் முடிவுகள் இறுதியனாதாக இருத்தலும் வேண்டும்.

**44. குழுக்களை நிறுவி அமைத்தல்.–** இந்தச் சட்டத்தின் அல்லது நிலைவிதிகளின்படி நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு எதற்கும் குழுக்களை நிறுவி

அமைப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள போது, அத்தகைய குழுக்களானது அதிகாரஅமைப்பின் சம்பந்தப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் மற்றும் அது ஒவ்வொரு நிகழ்விலும், அதிகாரஅமைப்பு பொருத்தம் எனக் கருதும் பிற நபர்களையும் கொண்டிருக்கும்.

**45.காலிப்பணியிடங்களை நிரப்புதல்.–** நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு அல்லது ஏதேனும் பிற அமைப்பில் ஏற்பட்ட காலிப்பணியிடங்களை அவர் நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட காலஅளவில் எஞ்சியுள்ள காலத்திற்கு, காலியான உறுப்பினர்களை நியமிக்கும் அல்லது தேர்ந்தெடுக்கும் நபரால் அல்லது அமைப்பால் கூடிய விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும்.

**46. அதிகார மற்றும் நிறுவன அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்களால் செல்லத்தகாதது ஆகாது.–** நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு அல்லது பிற அமைப்பின் செயல் அல்லது நடவடிக்கையானது, காலியிடம் அல்லது நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு அல்லது பிற அமைப்பின் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு எதனாலும் அல்லது வழக்கின் தகுதிகளை பாதிக்காத செயல் அல்லது நடவடிக்கைகளில் குறைபாடு அல்லது முறைகேடு எதனாலும் அல்லது இந்தச் சட்டத்தின்படி, நிறுவனத்தின் அதிகார அமைப்பு அல்லது ஏதேனும் பிற அமைப்பின் கூட்டம் நடைபெறவில்லை என்ற அடிப்படையில் செல்லாததாக ஆக்கப்படுதல் கூடாது.

**47. நிறுவனத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்குதல்.–** (1) நிருவாக மன்றமானது, நிருவாக குழுவின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதன் மூலம் மற்றும்

தற்போதுள்ள நிருவாகக் குழுவின் கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களித்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பெரும்பான்மையினால், குழுவின் கருத்தில் ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கிய ஒரு குற்றத்திற்காக அத்தகைய நபர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவராக இருந்தால் இதன் பொருட்டு செய்யப்பட்ட எழுத்துப்பூர்வமான ஆணை ஒன்றின் மூலம், நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் தகுதியிலிருந்து எவரையும் நீக்கலாம்.

(2) மேலும் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவரானால் அல்லது ஒரு நொடித்த நிலையராக தீர்ப்பளிக்கப்பட்டவரானால் அதன்பொருட்டு எழுத்துப் பூர்வமான ஒரு ஆணையினால், நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் தகுதியிலிருந்தும் நிருவாகக் குழு நபர் எவரையும் நீக்கலாம்.

(3) முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைக்கு எதிராக, காரணம் அளிப்பதற்கு ஒரு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டாலன்றி நபர் எவருக்கும் எதிராக இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எடுக்கப்படுதல் கூடாது.

(4) நிகழ்விற்கேற்ப உட்பிரிவுகள் (1)அல்லது (2)இன்படி ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஆணையின் படியானது (நகல்) அது ஏற்படுத்தப்பட்ட பிறகு, வகுத்துரைக்கப்படும் முறையில் சம்பந்தப்பட்ட நபருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

**48. நிறுவனத்தின் பதிவுருக்களை மெய்ப்பிக்கும்.–** நிறுவனத்தின் ஏதேனும் அதிகார அமைப்பு அல்லது குழுவின் ரசீது, விண்ணப்பம், அறிவிக்கை, செயல்முறை ஆணை, தீர்மானம் அல்லது நிறுவனத்தின் உடைமையிலுள்ள பிற ஆவணங்கள் ஆகியவை நிருவாக அலுவலரால் சான்றளிக்கப்பட்டால் அத்தகைய ரசீது,

விண்ணப்பம், அறிக்கை, ஆணை, செயல்முறை ஆணை அல்லது தீர்மானம், ஆவணங்கள் அல்லது பதிவேட்டில் உள்ள இருப்பு ஆகியவை முதல் நோக்குச் சான்றாக பெறப்படுதல் வேண்டும் மற்றும் ஏற்புடையச் சாட்சியமாக ஏற்கப்பட்டால் மூலத்தில் உள்ள பொருண்மைகள் மற்றும் நடவடிக்கைகளின் சான்றாக ஒப்பு கொள்ளப்படுதல் வேண்டும்.

**49. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.**– (i) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் அல்லது நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் நிறுவுதல் அல்லது மறுநிறுவுதலுக்கு இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு அறிவிக்கையின் மூலம் அந்த இடர்பாட்டை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகைமுறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** அத்தகைய அறிவிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு முடிவடைந்ததற்கு பின்னர் வழங்கப்படுதல் கூடாது.